**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2015**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ்வதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் வருமானச் செலவினக் கூற்று பின்னிணைப்பு இலக்கம் 01 ஆகவும் நிதியத்திற்குரிய முதலீடு தொடர்பான கூற்று பின்னிணைப்பு இலக்கம் 2 ஆகவும் உள்ளடக்கப்பட்டு நிதியத்தின் நடவடிக்கைகளது நிர்வாகம் தொடர்பான அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின்

நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2015 சனவரி 01 ஆந் திகதிய Health Ministry/ CA/011/2015 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரின் கடிதத்தின் 11 ஆம் பந்தி | மேலதிகநேர வேலை 150 மணித்தியாலங்களை விஞ்சி வேலை செய்வற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளாமலும் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை விஞ்சி 2015 சனவரி முதல் செப்தம்பர் வரையான காலப்பகுதியில் 72 சந்தர்ப்பங்களில் கண் வங்கியின் 8 தாதி உத்தியோகத்தர்களுக்கு ரூபா 557,834 தொகையான மேலதிகநேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 6,991,265 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட பணம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 6,443,292 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 49,171,867 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 42,728,575 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. சுகாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 63,884,216 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

நிதியத்தின் 2012 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 102,502,994 மிகையாக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 46,900,783 பற்றாக்குறையாக இருந்தது. மீண்டும் 2014 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் மிகை ரூபா 49,171,867 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின்போது அது ரூபா 6,443,292 வரை குறைவடைந்திருந்தது.
அந்தந்த ஆண்டுகளில் கிடைக்கும் நன்கொடை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நன்கொடைகள் அவ்வாண்டிலேயே பயன்படுத்தப்படாமையால் நிதி விளைவுகளில் போதியளவு விலகலொன்று இடம்பெற்றிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இலங்கையின் சுகாதார பாதுகாப்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல், இலங்கையின் சுகாதார பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இடையே ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் கல்வி அல்லது அறிவினை விருத்தி செய்தல், விசேட முன்மொழிவு திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெறும் நன்கொடைகளை இயலுமான வரை அதற்காக பயன்படுத்துதல் மற்றும் மக்களின் சுகாதார பாதுகாப்பிற்காக பணத்தை ஈடுபடுத்தல் மற்றும் இலங்கையின் சுகாதார சேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் அத்தியவசிய மருந்துகளை கொள்வனவு செய்தல் நிதியத்தின் நோக்கங்களாகும். இந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் சுகாதார பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் நிலவும் பெரும்பாலான குறைபாடுகளைக் குறைப்பதற்கு நிதியத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அந்நிறுவனங்கள் அறிவுறுத்தப்படமை மற்றும் அறிவிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் நிதியத்தின் நோக்கங்கள் போதியளவில் அடையப்பட்டிருக்கவில்லை. 2012, 2013 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்குச் சொந்தமாக பொது நிதியத்தில் காணப்பட்ட ஆண்டுடிற்காக பயன்படுத்த முடியுமாக இருந்த நிதியம் முறையே ரூபா 230,311,207, ரூபா 276,654,645, ரூபா 261,124,443 மற்றும் ரூபா 295,194,406 ஆக இருந்ததுடன், அதில் முறையே 78, 62, 79 மற்றும் 82 சதவீதம் நிதியத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருநாகல் மாவட்டத்தின் 3000 பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்கு வெளிநாட்டு அரசொன்றினால் ரூபா 3,044,000 தொகை நன்கொடை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்கப்பெற்ற மொத்த நன்கொடை ரூபா 2,289,402 தொகை மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகளின் எண்ணிக்கை 891 ஆக இருந்தது. பலவீனமான செயன்முன்னேற்றம் காரணமாக செயற்திட்ட காலம் 2014 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முறையே 30 சதவீதம் மற்றும் 45 சதவீதம் மாத்திரமாகும் இருந்தன. அவ்வாறே 12 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளில் 3,283 பார்வை குறைபாடுடைய மாணவர்கள் இருப்பதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் நடவடிக்கைகள் விஷன் 2020 செயற்திட்டத்தினால் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 6 சுகாதார மருத்துவ

உத்தியோகத்தர் பிரிவுகளில் பார்வை குறைபாடுடைய பாடசாலை மாணவர்களை இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 மற்றும் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பறவை தொற்று இன்புலுவன்சாவிற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் எதிர்பார்ப்பில் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்திற்கு முன்தயார்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு அமெரிக்க ஐக்கிய குடியரசு மீளாய்வாண்டில் ரூபா 22,391,132 தொகை சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையில் காலக் கணிப்புடன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கு தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் 25 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அவற்றுள் 12 செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 10,702,700 தொகையான முழுப் பணமும் பயன்படுத்தாமல் இருந்ததுடன், எஞ்சிய 13 செயற்பாடுகளுக்காக ரூபா 11,688,432 ஆன நிதிஏற்பாட்டினை விஞ்சி ரூபா 1,091,969 செலவிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் பிரகாரம் பரிசோதனைக்காக தேவையான இரசாயனப் பொருட்கள் (Reagents & Consumables) கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 6,170,100 ஆன நிதிஏற்பாடுகளை விஞ்சி ரூபா 2,404,950 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 1,080 Influenza Like IIIness (ILI) பரிசோதனைகளில் 570 பரிசோதனைகள் மற்றும் 240 Servere Acute Respiratory Infection (SARI) பரிசோதனைகளில் 120 பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) 11 குறிப்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த ரூபா 16,853,756 ஆன நன்கொடைகள் 3 வருடங்களுக்கும் 28 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாதிருந்ததுடன், தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு ஏனைய பொருத்தமான செயற்பாடுகளுக்கேனும் அப்பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் உலக சுகாதார அமைப்பினால் முல்லேரியா தேசிய மனநோய் சுகாதார கல்லூரியின் மனநோய் சுகாதார பயிற்சிக்காக செலவிடுவதற்கு நிதியத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 384,560 தொகை குறித்த காலத்தில் உரிய செயற்பாட்டிற்கு செலவிடப்படாததன் காரணத்தால் உலக சுகாதார அமைப்பிற்கு மீள அனுப்புவதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் போசிக்கப்படும் இலங்கை கண் வங்கியை தாபிக்கும் போது சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவகத்துடன், ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையில் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற சத்திர சிகிச்சைகளுக்காக இலங்கை கண் வங்கியால் அறவீடொன்றில்லாமல் கண் வில்லைகளை வழங்கப்படுகின்றன. கண் வங்கியிடமிருந்து கண் வில்லை பெற்றுக் கொள்ளும் அநேகமான மருத்துவர்கள்

உரிய சத்திரசிகிச்சைகளை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளுகின்ற போதிலும் குறித்த நோயாளர்களிடமிருந்து கண் வில்லைகளுக்காக பணத்தை அறவிடாமல் இருப்பதற்கான உறுதிப்படுத்தலொன்று இலங்கை கண் வங்கியால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை திரிபோச சங்கத்தினால் கொள்வனவு செய்வதற்கு இருந்த இயந்திரங்கள் தொடர்பான கொள்வனவுச் நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டு தெரிவுசெய்யப்பட்டிருந்த வழங்குனருக்கு இயந்திரங்களின் பெறுமதியில் 20 சதவீதம் முற்பணத்தொகை செலுத்தியதன் பின்னர் அவ்வியந்திரங்களைப் பரீட்சிப்பதற்காக 4 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். தொழில்நுட்ப அறிவுடன் கூடிய குழுவொன்று செல்ல வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 4 உத்தியோகத்தர்களில் 3 உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டிராத உத்தியோகத்தர்களாக இருந்தனர். மேலும் திட்டமிடப்பட்ட 7 நாள் சுற்றுலாவிற்குப் பதிலாக 10 நாட்கள் எடுத்திருந்தமையால் மதிப்பிடப்பட்ட தொகையை விட ரூபா 464,111 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஐக்கிய அமெரிக்க குடியரசின் இலங்கை தூதரகத்தின் உத்தியோகத்தரொருவரின் பிரயாணச் செலவினம் மற்றும் இடர்நேர் படிகள் உட்பட வெளிநாட்டு பிரயாணத்திற்காக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 3,600,000 ஆக இருந்ததுடன், விமான பிரயாண நுழைவுச்சீட்டு உட்பட ஏனைய ஆவணங்கள் என்பவற்றின் மூலம் நிதியத்தினால் செலவுகள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய இரத்த வங்கிக்கு தேவையான உடனடி நிதி தேவைப்பாட்டிற்காக மாத்திரம் நிதியத்தினை ஈடுபடுத்தும் நோக்கில் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டின் போது மத்திய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் நோக்கத்திற்கு முரணாக மீளாய்வாண்டில் தேசிய இரத்த தினம் மற்றும் இரத்த சேவையின் வருடாந்த கல்வி பயிற்சி நடாத்துவதற்கு மத்திய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 2,036,076 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,103,895 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 5,000 செரமிக் கோப்பைகளின் தேவைப்பாடு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

## 4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் தாதிகள் தங்குமிடவிடுதியின் 2 ஆவது கட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யும் ஒப்பந்தத்திற்காக 33 நாட்களுக்கு ரூபா 132,557 தொகையான தாமதக் கட்டணங்கள் ஒப்பந்தக்காரரிடம் அறவிடப்படாதிருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதியில் 15 சதவீதத்தை மிகைத்து அதாவது கிரயத்தில் ரூபா 1,880,809 தொகை மேலதிக வேலைகளை நிறைவேற்றுவதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய கண் வைத்தியசாலைக்கு ரூபா 2,550,000 தொகை செலவிடப்பட்டு சிற்றுண்டிச்சாலை கட்டிடமொன்றை நிர்மாணித்து நன்கொடையாக அளிப்பதற்கு தேசிய லொத்தர் சபை இணங்கி அதில் ரூபா 1,079,207 ஐ 2013 ஒக்தோபர் மாதத்தின் போது நிதியத்திற்கு அனுப்பியிருந்தது. 2013 மார்ச் 10 ஆந் திகதி வழங்கப்பட்ட ஒப்பந்தத்திற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,079,207 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 791,536 ஆக இருக்கையில் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 287,671 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் ஆரம்பத்திலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடும்போது 18 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பரப்புகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) சுகாதார அபிவிருத்தி செயற்திட்டம் | விழா மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கொடுப்பனவு செய்யும் போதும் உணவு பொருட்களுக்காக செலவிடும் போதும் வருகை தொடர்பான சரியான உறுதிப்படுத்தலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிர்மாண ஒப்பந்தம் | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் திட்டம், மதிப்பீடு என்பவற்றின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதாக முறையான கண்காணிப்பொன்று காணப்படவில்லை. |

***வருமான மற்றும் செலவினக் கூற்று***

------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | | |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 69,322,320 | | 64,901,840 | |
| நுன்கொடைகள் | 154,629,240 | | 151,032,180 | |
| முதலீட்டு வட்டி | 20,527,297 | | 23,080,887 | |
| ஏனைய வருமானம் | 51,628,084 | | 35,616,537 | |
| | | 296,106,941 | | 274,631,444 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாக செலவினம் | 2,534,903 | | 2,206,057 | |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 23,010 | | 32,000 | |
| சுகாதார அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் | 287,105,736 | | 223,221,520 | |
| | | (289,663,649) | | (225,459,577) |
| மிகை | | 6,443,292 | | 49,171,867 |

பின்னிணைப்பு *02*

## முதலீட்டு கூற்று

**நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி**

| சான்றிதழ் இலக்கம் | முதலீடு செய்த திகதி | முதலீட்டுக் காலம் | 2015 சனவரி 01 இல் மீதி | 2015 ஆம் ஆண்டில் முதலீடு | 2015 ஆம் ஆண்டில் மீளப் பெறல் | 2015 திசெம்பர் 31 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 865632 | 2013/12/21 | 3 மாதங்கள் | 63,000,000 | - | 63,000,000 | - |
| 865633 | 2013/12/21 | 3 மாதங்கள் | 23,000,000 | - | - | 23,000,000 |
| 865616 | 2013/12/14 | 3 மாதங்கள் | 15,000,000 | - | | 15,000,000 |
| 331419 | 2013/10/08 | 3 மாதங்கள் | 1,500,000 | - | - | 1,500,000 |
| 865615 | 2013/12/14 | 3 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| 865614 | 2013/12/14 | 3 மாதங்கள் | 20,000,000 | - | 20,000,000 | - |
| 865606 | 2013/12/05 | 1 வருடம் | 50,000,000 | - | - | 50,000,000 |
| 865627 | 2013/12/21 | 3 மாதங்கள் | 35,000,000 | - | - | 35,000,000 |
| | | | 227,500,000 | | 83,000,000 | 144,500,000 |

**திறைசேரி முறி - இலங்கை வங்கி**

| சான்றிதழ் இலக்கம் | முதலீடு செய்த திகதி | முதலீட்டுக் காலம் | 2015 சனவரி 01 இல் மீதி | 2015 ஆம் ஆண்டில் முதலீடு | 2015 ஆம் ஆண்டில் மீளப் பெறல் | 2015 திசெம்பர் 31 இல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 314 | 2014/02/21 | 350 | 17,540,972 | - | - | 18,704,743 |
| 314 | 2014/12/26 | 182 | 4,863,815 | - | - | 4,844,960 |
| 314 | 2014/08/29 | 182 | 40,477,098 | - | - | 40,388,919 |
| 314 | 2015/09/25 | 182 | - | 19,347,040 | - | 19,347,040 |
| M 13 B 026845 | 2014/12/29 | 04 | 16,000,000 | - | 16,000,000 | - |
| M 13 B 026303 | 2014/12/29 | 13 | 35,000,000 | - | 35,000,000 | - |
| 1036618 | 2015/12/21 | 14 | - | 12,500,000 | - | 12,500,000 |
| M 15 B - 015915 | 2015/09/08 | 182 | - | 80,000,000 | - | 80,000,000 |
| 1002410 | 2015/12/30 | 05 | - | 13,000,000 | - | 13,000,000 |
| 1036614 | 2015/12/21 | 14 | - | 10,500,000 | - | 10,500,000 |
| | | | 113,881,885 | 135,347,040 | 51,000,000 | 199,285,662 |